# 10.12.2024 அன்று நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான ஏற்றுமதி ஊக்குவிப்பு குழு (District Export Promotion Committee Meeting) கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி**

ந.க.எண். DICTUT/3/2024-A3 நாள் 21-12-2024

2024-25 நிதியாண்டிற்கான மாவட்ட அளவிலான ஏற்றுமதி ஊக்குவிப்பு குழுவிற்கான கூட்டம் 10.12.2024 அன்று 3.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் :

**உறுப்பினர்கள் :**

1. உதவி இயக்குநர் மற்றும் அயல்நாட்டு வணிக வளர்ச்சி அலுவலர், அயல்நாட்டு வர்த்தக இணை தலைமை இயக்குநர் அலுவலகம், கோயம்புத்தூர் (காணொலி வாயிலாக)
2. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தூத்துக்குடி
3. துணை இயக்குநர், கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், தூத்துக்குடி
4. முன்னோடி வங்கி மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, தூத்துக்குடி

**சிறப்பு அழைப்பாளர்கள் :**

1. தலைவர், துடிசியா, தூத்துக்குடி
2. தலைவர், CII, தூத்துக்குடி
3. தலைவர், அனைத்திந்திய தொழில் வர்த்தக சங்கம், தூத்துக்குடி
4. தலைவர், இந்திய வர்த்தக சங்கம், தூத்துக்குடி
5. தலைவர், கோவில்பட்டி கடலைமிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்கம், கோவில்பட்டி
6. தலைவர், ஆத்தூர் வெற்றிலை உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பு, ஆத்தூர்
7. தலைவர், உடன்குடி பனைப்பொருட்கள் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பு, உடன்குடி

கூட்டத்தில் கோயம்புத்தூர் அயல்நாட்டு வர்த்தக இணை தலைமை இயக்குநர் அலுவலகத்தைச் சார்ந்த திரு.S.சிவஞானம், அயல்நாட்டு வணிக வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் அவர்கள் காணொலி வாயிலாக கலந்து கொண்டு வழங்கிய விபரங்கள் பின்வருமாறு :

1. தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதி பற்றிய தரவுகள்
2. கடல் சார்ந்த பொருட்கள் மற்றும் கயிறு சார்ந்த பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக தேவையுள்ளதால் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
3. ஏற்றுமதி செய்யக்கூடிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அயல்நாட்டு வர்த்தக இணை இயக்குநர் அலுவலகம் மூலம் EPCG (Export Promotion Capital Goods Scheme), Advanced Authorization Scheme ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
4. ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கான IE code பெறும் இணையதள வழிமுறை எளிதாக்கப்பட்டுள்ளது.
5. ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் புதிய சந்தை வாய்ப்புகள் குறித்த தகவல்களை அயல்நாட்டு வர்த்தக இணை தலைமை இயக்குநர் அலுவலகம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
6. சிறிய அளவில் தபால் துறை மூலம் ஏற்றுமதி செய்யக்கூடிய வழிமுறைகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் BIS அங்கீகாரம் பெற்ற NABL ஆய்வகம் இல்லாததால் ஏற்றுமதி செய்யும் பொருட்களை தர வாரியாக பகுப்பாய்வு செய்ய பிற மாவட்டங்களுக்கு செல்வது மிகவும் சிரமமாக உள்ளதால் தூத்துக்குடி மாவட்டத்தில் உடனடியாக அங்கீகாரம் பெற்ற NABL ஆய்வகம் நிறுவ வேண்டுமென்றும், கடல் சார்ந்த பொருட்களுக்கு குழுமம் அமைக்க முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் CII தலைவர் கேட்டுக்கொண்டார்.

Logistics கட்டணம் 14% லிருந்து 8% ஆக குறைக்கப்பட்டால் ஏற்றுமதி செய்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஐரோப்பிய நாடுகளுக்கான Ocean tax அதிகமாக உள்ளது. எனவே அதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். புதியதாக ஏற்றுமதி செய்பவர்களுக்கு வங்கிக்கடன் சுலபமாக கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஏற்றுமதியாளர்களுக்கு அரசால் அறிவிக்கப்படும் மானிய திட்டங்கள் மற்றும் பிற நாடுகளுடன் மத்திய அரசு அவ்வப்போது மேற்கொள்ளும் ஒப்பந்த விபரங்களையும் ஏற்றுமதியாளர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்திற்கு ‘Town of excellence in marine products” க்கான விருது கிடைத்துள்ளதால் மதிப்புக் கூட்டப்பட்ட கடல் சார்ந்த பொருட்களை அதிகளவில் ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்க வேண்டும். Interest Equalization Scheme, Rought Up Scheme-ஐ இணையதளத்தில் பயன்படுத்துவதை மேலும் எளிதாக்க வேண்டுமென்று ICCI தலைவர் தெரிவித்தார்.

வரியில்லாத இறக்குமதி சான்றிதழ் பெறுபவர்களின் அளவு 3% ஆக உயர்ந்துள்ளது. துறைமுகத்தில் கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். ரூ.5 கோடி வரை ஏற்றுமதி செய்பவர்களுக்கு 50% வரை MPEDA மூலம் உதவிகள் வழங்கப்படுகிறது. இதை ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்த

முன்வர வேண்டும். வெளிநாடுகளில் நடக்கும் ஏற்றுமதி கண்காட்சிகளில் பங்கு பெறுவதற்கு மானியங்கள் MPEDA மூலம் பெறலாம் என MPEDA துணை இயக்குநர் தெரிவித்தார்.

ஏற்றுமதி செய்யப்படும் கடலைமிட்டாய் வெளிநாடுகளுக்கு சென்று வருவதற்கு குறைந்தபட்சம் 75 நாட்கள் ஆகிவிடுகிறது. எனவே கடலைமிட்டாயில் உள்ள சத்துக்களின் அளவு மாறிவிடுவதால் கடலைமிட்டாயை கடல்வழி ஏற்றுமதி செய்வதில் சிரமம் உள்ளது என கோவில்பட்டி கடலைமிட்டா்ய உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

ஏற்றுமதி செய்யும் வழிமுறைகள் குறித்த அடிப்படைப் பயிற்சி பெற்ற பின்பு உடன்குடி கருப்பட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உடன்குடி கருப்பட்டி உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடலைமிட்டாய் ஏற்றுமதி செய்யும் கால அளவை குறைப்பதற்கு ஆகாய வழி ஏற்றுமதி செய்வதை அதிகப்படுத்தவும், உடன்குடி கருப்பட்டியை ஏற்றுமதி தரத்தில் உற்பத்தி செய்து தமிழர்கள் அதிகளவில் வாழும் தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஸ்ரீலங்கா, நார்வே, கனடா ஆகிய இடங்களுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யவும் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்டத்தில் NABL அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த ஏற்றுமதி செய்ய விரும்பும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான ஏற்றுமதிக்கான சிறப்பு கருத்தரங்கம் DGFT, Export Councils, FIEO, Financial Institution, GST அலுவலகம், சுங்கத்துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விரைவில் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அ.ஸ்வர்ணலதா
19.12.2024
பொது மேலாளர்
மாவட்ட தொழில் மையம்
தூத்துக்குடி

ELAMBAHAVATH K
21-12-2024
மாவட்ட ஆட்சித்தலைவர்
தூத்துக்குடி